திருவல்லிக்கேணி பகுதி பழைய 88 –வது வட்ட முன்னாள் செயலாளரும் புதிய 115 வட்டத்தை சார்ந்த மாவட்டக் கழக பிரதிநிதி மா.பச்சையப்பன் வயது 80 உடல் நலக்குறைவால் நேற்று அதிகாலை மரணமடைந்தார். தகவல் அறிந்து கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மலர் அஞ்சலி செலுத்தி, குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். மேலும் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, டி.கே.எஸ். இளங்கோவன், பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை, வி.பி.பொன்னரசு, க. திருநாவுக்கரசு, வே.கமலா செழியன், ரவி ராஜ்குமார், க.வே.மோகன், லைனர். கே.பிரபு, என். ரவி, கே.ஜி. செந்தில்குமார், ஜெ.விஜயகுமார், ஆர்.ராஜ்குமார், புல்லட்.கணேசன், கலீல் ரஹ்மான், அ.அன்பு குமார், ரகுமான் ஷரீப், எஸ்.என், கபாலீதாசன், எ.விக்னேஸ்வரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக

அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் சகோதரி சின்னக்கண்ணு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 6

சென்னை தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.குண சேகரின் சகோதரி திருமதி. சின்னக்கண்ணு அவர்கள் நேற்று இறைவெய்தினார் . சென்னை தெற்கு மாவட் டக் கழக அவைத் தலை வர் எஸ்.குணசேகரனின் சகோதரி திருமதி சின்ன கண்ணு (வயது 90) நேற்று (5.6.2025 வியாழக்கிழமை) இயற்கையெய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம். இச்செய்தியறிந்த தும் மாவட்டக் கழகத் தோழர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த திருமதி சின்னகண்ணு உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக அவைத்த லைவர் எஸ் குணசேகரன் அவர்களின் சகோதரி திரு மதி சின்னகண்ணு (வயது 90) நேற்று (05.06.2025) நண்பகல் 12.00 மணி அள வில் வெட்டுவாங்கேணி சங்கர் நகரில் உள்ள அவ ரின் இல்லத்தில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதி ஊர் வலம் இன்று (06.06.2025) காலை 10.00 மணி அள வில் அவரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஈஞ்சம் பாக்கம் இடுகாட்டில் நல் லடக்கம் செய்யப்படுகி றது.

உலக சுற்றுச்சூழல் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் ஐந்தாம் தேதி கொண்டாடப்படுகிறது அதனை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எனது பூமி நானே பொறுப்பு என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடைபெற்றது இதனை சென்னை மாநகராட்சி மற்றும் எம் கே மோகன் டிரஸ்ட் இணைந்து நடத்தியது இதில் அண்ணா நகர் பகுதியில் உள்ள 13 பள்ளியில் தனித்தனியாக நடைபெற்றது இதில் மாணவர்கள் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதிப்பு எவ்வாறு ஏற்படுகிறது அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்த விழிப்புணர்வு ஓவியங்களை வரைந்தனர் அதில் சிறந்த ஓவியங்களுக்கு அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம் கே மோகன் பரிசுகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி இணை ஆணையர் பிரவீன் குமார், அண்ணா நகர் பகுதி செயலாளர் ராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் அதியமான்,ஸ்ருதி கார்த்திக்,மற்றும் அதிகாரிகள் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்று கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

2026 சட்டமன்றத் தேர்தலில்

234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற அயராது பாடுபடுவோம்!

திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்ற அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 6-

நடைவெறவிருக்கும் சட் டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற அயராது பாடுபடு வோம் என்று திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடை பெற்ற அணிகளின் நிர்வாகி கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெச வாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகளின் ஆலோச னைக் கூட்டம் 04.06.2025 மாலை 4.00 மணியளவில் சென்னை அண்ணா அறி வாலயம் கழக அலுவலகத் தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செய லாளர் கு.கருணாநிதி, தலை வர் துரை கி.சரவணன், கழக வர்த்தகர் அணிச் செய லாளர் காசி முத்துமாணிக்கம், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ. நாகலிங்கம், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்தி ரன், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப் துல்லா எம்.பி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது.

நடைபெற்ற ஆலோச னைக் கூட்டத்தில் 4 அணி களின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற் றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா

கழகத் தலைவர் அவர் கள் கழகப் பொதுக்குழுவில் அறிவித்தப்படி முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா வினை தமிழ்நாடு முழுவ தும் சிறப்பாக கொண்டாடு வது என்றும், பள்ளி மாணவ - மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவுகள் வழங்கியும் சிறப் பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கி றது.

பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் செயல்பாடு களை கண்காணிக்கவும், தமிழ்நாடு முழுவதும் அணி களின் செயல்பாடுகளை வி ரை வு ப் ப டு த் த வு ம் , ஆலோசனை வழங்கிடவும், கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. அவர்களை மேற்கூ றிய அணிகளுக்கு ஆலோச கராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக் கும், கழகப் பொதுச் செய லாளர், துணை முதல்வர் ஆகியோருக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. அவர்கள் தலைமை யில் நடைபெற்ற கூட்ட த்தில் மாநில நிர்வாகிகள் அறிமுகம், அணியின் செயல்பாடுகள், அடுத்தக் கட்ட செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்ப ட் டது. அணிகளின் மாநில நிர் வாகிகள் அணிகளின்யவ ளர்ச்சிக்கு தங்களது கருத்துக்களை தெரிவித்த னர். கழக துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் அக்க ருத்துக்களை மாண்புமிகு கழகத் தலைவரிடம் எடுத் துக் கூறி, தலைவரின் மேலான ஆலோசனை களை பெற்று, அணிகளின் வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருப்பதாக உறுதிய ளித்தார்.

கழக அணிகளின் ஒன் றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமிக் கப்படாமல் உள்ள மாவட் டங்களில் மூன்று மாத இலக்கு நிர்ணயித்து, கழக முப்பெரும் விழாவிற்கு முன்பாக மாவட்டச் செய லாளர் ஒப்புதலோடு அமை ப்பாளர் - துணை அமைப் பாளர்களை நியமிக்க வேண்டுமென இக்கூட்டம் அணிச் செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்க ளின் ஆணைப்படி, வெல் வோம் 200 - படைப்போம் வரலாறு என்ற தாரக மந்தி ரத்தை மனதில் வைத்து அணி நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று மக்களிடம் தமிழ் நாடு அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி, வருகிற 2026 சட்டமன்ற பொதுத் தேர்த லில் நமது திராவிட மாடல் அரசு 234 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடிட அய ராது பாடுபடுவோம் என்று உறுதியளிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வரும் 7 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம் இடங்கள்

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, ஜூன் 6-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப் ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ் வேறு இடங்களில் நடை பெறும் காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்" 07-06-25 முதல் 19-06- 25 வரை நடைபெறும் இடங் களின் விவரம்:

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு "அன்னம் தரும் அமுத கரங்கள்" கீழ் கண்ட நாட்களில் நடைபெ றும் விவரம் பின்வருமாறு:

நாள் 07.6.25 சனிக்கி ழமை 108 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 89 அவ்வை நகர் கோல்டன் காலனி கார் னர் வட்ட செயலாளர் M.E. சேகர், எம்.சி 2) வட்டம் 90 பாடி புதுநகர் 3,4,5 வது தெரு முனை வட்ட செய லாளர் நா. நெப்போலியன்

நாள் 08.6.25 ஞாயிற்றுக் கிழமை 109 ஆவது நாள்

திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 75 அ எஸ். எஸ் புரம் அ பகுதி, 7 ஆவது தெரு ஓட்டேரி , வட்ட பொறுப்பாளர் பா.பி. தாஸ் 2) வட்டம் 73 அ பிரகாஷ் ராவ் காலனி புளியந்தோப்பு வட்ட செயலாளர் பொல்லு (எ) சுரேஷ்குமார்

நாள் 09.6.25 திங்கட்கிழமை 110 ஆம் நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 94 ஆ ஜெக நாதன் நகர் வட்ட செயலா ளர் க.சுகுமாரன் 2) வட்டம் 94 அ பாரதி நகர் முதல் தெரு வட்ட செயலாளர் ஆர். தீனதயாளன்

நாள் 10.6.25 செவ் வாய்க்கிழமை 111 ஆம் நாள் கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 64 நேதாஜி நகர் மெயின் ரோடு வட்ட செயலாளர் S.முருகன், 2) வட்டம் 65 அ லக்ஷ்மி நகர் மெயின் ரோடு வட்ட செய லாளர் N.பவுல்ராஜ்

நாள் 11.6.25 புதன்கிழமை 112 ஆம் நாள்தி ரு.வி.க நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 72 அ வ.ஊ.சி நகர் முதல் தெரு அம்பேத் கர் மன்றம் அருகில்

வட்ட செயலாளர் M.Z.அபோய், 2) வட்டம் 72 தாஸ் நகர் பிரதான சாலை கன்னிகாபுரம் வட்ட செயலாளர் M.A டீக்கா

நாள் 12.6.25 வியாழக்கிழ மை 113 ஆம் நாள் அம்பத் தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 80 பானு நகர் முதல் மெயின் ரோடு புதூர் போலீஸ் பூத் அருகில்

வட்ட செயலாளர் வெ. ராதாகிருஷ்ணன் 2) வட் டம் 81 துலுக்கானத்தம்மன் கோயில் அருகில் வெங்கடா புரம் வட்ட செயலாளர் மு. இரகு

நாள் 13.6.25 வெள்ளிக் கிழமை 114 ஆம் நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 70 (அ) வசந்த கார்டன் மெயின் தெரு அய னாவரம்

வட்ட செயலாளர் D. சந்திரசேகர் 2) வட்டம் 70 சின்ன குழந்தை 2 வது மடுமா நகர் வட்ட செயலா ளர் பா. அன்பரசு

நாள் 14.6.25 சனிக்கி ழமை 115 ஆம் நாள்

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 82 மேனம் பேடு 20 B பஸ் நிலையம் அருகில் வட்ட செயலாளர் மூ. சண்முகம் 2) வட்டம் 82 ஆ கள்ளிகுப்பம் ஆர்ச் அரு கில் வட்டச் செயலாளர் ஆ. சுந்தரராஜ்

நாள் 15.6.25 ஞாயிற்றுக் கிழமை 116 ஆம் நாள் வில் லிவாக்கம் கிழக்கு பகுதி

1) 98 வது வட்டம் பார்த் தசாரதி தெரு வட்ட செய லாளர் K.பாஸ்கர் 2) வட் டம் 98 அ மேட்டுத்தெரு வன்னியர் சங்க மண்டபம் அருகில் வட்ட செயலாளர் C.தேவராஜ்

நாள் 16.6.25 திங்கட்கிழமை 117 ஆம் நாள் துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60 அ அன்னை சத்யா நகர் பி.சி பகுதி

வட்ட செயலாளர் ஆ. நா. பார்த்திபன் 2) துறை முகம் மேற்கு பகுதி: வட் டம் 54 ஆ அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணப்பா, குளம் தெரு (ஆட்டோ ஸ்டேண்டு) அருகில் வட்ட செயலாளர் ஆர்.ரவிச்சந் திரன்

நாள் 17.6.25 செவ் வாய்க்கிழமை 118 ஆம் நாள் எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 99 சண்முக ராயன் தெரு ஓட்டேரி வட்ட செயலாளர் R.M. ரங் கநாதன் 2) வட்டம் 99 அ நேரு பார்க் TNHB வட்ட செயலாளர் சி.சேகர்

நாள் 18.6.25 புதன்கிழமை 119 ஆம் நாள் எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 58 பேரக்ஸ் ரோடு பெரிய மேடு வட்ட செயலாளர் V. விஜயகுமார்

2) வட்டம் 58 அ கரி யப்பா தெரு வைக்காகா ரன் தெரு சந்திப்பு புரசை வாக்கம் வட்ட செயலாளர் R.பாபு

நாள் 19.6.25 வியாழக்கி ழமை 120 ஆம் நாள் துறை முகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56 சண்முக ராயன் தெரு தையப்பன் தெரு சந்திப்பு வட்ட செய லாளர் த. கதிரவன் (எ) ராஜா 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54 தங்க சாலை அரசு அச்சகம் அரு கில் வட்ட செயலாளர் எம். ஜெய்சங்கர்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கி ணை ப் ப ா ள ர் க ள ா க சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகு மார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு அறிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் - ஆலத்தூர் வட்டம்

கொளக்காநத்தத்தில் புதிய அரசு கலை - அறிவியல் கல்லூரி!

கல்லூரி மேம்பாட்டிற்காக ரூ. 1 கோடி நிதியினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், ஜூன் 6-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயல கத்தில் இருந்து காணொளிக் காட்சி மூலம் பெரம்பலூர் மாவட்டம் கொளக்கா நத்தம் உள்பட 11 மாவட்டங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளை 26.05.2025 அன்று தமிழ்நாடு துணை முத லமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி னை கொளக்காநத்தம் மேல்நி லைப் பள்ளியில் போக்குவ ரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிர பாகரன், ஆலத்தூர் முன்னாள் ஒ ன் றி ய க் கு ழ த் த லை வ ர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நேரலை நிகழ்வை பார்த்து, வகுப்பறையில் இனிப்புகளை வழங்கினர்.

பின்னர், இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின் சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் கல்விக்கண் திறந்தவர் காமராசர் என்ப தைப்போல, உயர் கல்விக் கண் திறந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத் தில் உயர்கல்விக்கு முக்கியத்து வம் அளிக்கும் வகையில், அதிக கல்லூரி களும், பல்க லைக்கழகங்களும் உருவாக் கப்பட்டது. அவரின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் நம் முதலமைச்சர் அவர்கள், கல்வி ஒன்றே யாராலும் அழிக்க இயலாத சொத்து என் பதை உணர்ந்து நம் தமிழ் நாட்டில் கல்விக்கு அதிக முக் கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார் கள்.

தமிழ்நாட்டில் உயர் கல் வியை மேம்படுத்தும் நோக் கில், அதிக எண்ணிக்கை யிலான உயர்கல்வி நிறு வனங் களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புது மைப்படைப்புகள், தொழில் நுட்ப ஆராய்ச்சி ஆகியவற் றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன் மிகு இளைஞர்களை உரு வாக்குதல், அரசுப் பள்ளிக ளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" திட் டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகையாக வழங்குதல், முதல் தலைமுறை பட்டதா ரிகளுக்கு சலுகைகள், கல்லூ ரிகள் மற்றும் பல்கலைக்கழ கங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவ தால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகின்றது. இந்த ஆண்டு முதல் கல்லூரி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட் டத்தையும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அறிவித் துள்ளார்.

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் 10,11, மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் எளிதில் தேர்ச்சி பெறும் வகையில் "தேர்வை வெல்வோம்" என்ற தொகுப்பு எனது சார்பில் அனைவருக் கும் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு முதல் பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங் கொண்டம் என 4 தொகுதிக ளுக்கும் "தேர்வை வெல் வோம்" என்ற புத்தகத் தொகுப்பு வழங்கப்பட்டுள் ளது. மாணவ மாணவிகள் படித்தால் மட்டும் போதாது, படித்தவுடன் அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ப தன் அடிப்படையில் குன்னம் பகுதியில் கலைஞர் கணினி மையம் தொடங்கப்பட்டு, 60க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகை யில் டேலி (TALLY) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார்.

சென்னை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் சிந்தாமணி சிறப்பங்காடி தொ.மு.சங்கத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்விழா செம்மொழி நாளாக கொண்டாடப்பட்டது. சிந்தாமணி தொ.மு.ச.பொதுச்செயலாளர் அலிசன் தலைமையில் மாநில பொதுச்செயலாளர். சு.பத்மநாபன் அலுவலகவாயிலில் கொடியேற்றி இனிப்புடன் கூடிய அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெ.உஷா செயலாட்சியர்– இணைப்பதிவாளர் , சிந்தாமணி தொ.மு.ச.தலைவர் B.மாலதி, பொருளாளர் அன்பழகன், துணைத் தலைவர் பிரீத்தா , துணைப் பொதுச் செயலாளர் காயத்திரி, ஜான்சன், ஜோதி, முன்னாள் பொதுச் செயலாளர் அ.பாஸ்கரன், பொருளாளர் வைத்தீஸ்வரன், ஜெயக்குமார், செகதீசன், ஜிந்தாசேக்மதர், பிரேம்குமார், பார்த்தீபன், ஆனந்தன், விஜயகுமார், சுசிலா, ரூபன், மனோதீபன், செல்வராஜ், தீபா, ஜீவரத்தினம், ராஜமுத்தையா, விசாலாட்சி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட நேரு பூங்காவில்,பெருநகர சென்னை மாநகராட்சி உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் மரம் நடும் விழா நடைபெற்றது.இந்நிகழ்வில் தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர், 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.உடன் கழக நிர்வாகிகள் மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 176 –வது வார்டுக்கு உட்பட்ட நேதாஜி காலனி ,இபி காலனி ,பிருந்தாவன் நகர் ,ஆண்டாள் நகர் ,விஜயநகர் சந்திப்பு ஆகிய ஐந்து இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உயர் கோபுரம் மின் விளக்குகளை மாவட்ட விளையாட்டு மேம்பட்ட அணி அமைப்பாளரும் 176 வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் தொடங்கி வைத்தார். உடன் மாநகராட்சி மின் துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.